Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 287 | வெள்ளிக்கிழமை 09 செப்ரெம்பர் 2022 | ஆவணி 24 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 விலை : ரூ.50



# தள்ளாடுகிறது இலங்கை வீங்கியது அமைச்சரவை

- 37 இராஜாங்க அமைச்சர்கள் நியமனம்
- பெரமுன எம்.பிக்களுக்கே அதிக வாய்ப்பு
- ரணிலின் நகர்வுக்கு பல முனைகளில் எதிர்ப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 9

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் 37 இராஜாங்க அமைச்சர்கள் நேற்று நியமிக்கப்பட்டுள்ளனர். நாடு பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் நிலையில், அரச செலவினங்களைக் குறைக்க வேண்டும் என்று கோரி வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க- இவ்வாறு பெரும் அமைச்சரவை ஒன்றை நியமித்துள்ளமைக்குக் கடும் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன.

11 >




"நாடு கிடக்கிற கிடையில எம்.பிக்கள் என்ட உந்தத் தும்புத்தடிகளுக்கு இராஜங்க அமைச்சு என்ட பட்டுக்குஞ்சரம் கேக்குது பாருங்கோ..."

## வீங்கிய அமைச்சரவை சிக்கலை தீவிரமாக்கும்

பிரதான எதிர்க்கட்சி எதிர்ப்பு

கொழும்பு, செப்.9

நாடு மிகவும் பாரதூரமான வங்குரோத்து நிலையில் உள்ளபோது, அரசாங்கத்தால் தன்னிச்சையாகவும், நெறிமுறையற்றும் 37 இராஜாங்க அமைச்சர்கள் பெயரளவில் நியமிக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்

11 >

## நிலக்கரி கிடைக்காவிடில் 8 மணிநேரம் மின்வெட்டு!

அமைச்சர் காஞ்சன தகவல்

கொழும்பு, செப்.9

நிலக்கரி கையிருப்பு குறைந்துள்ளதால் நாட்டில் 8 மணித்தியால மின்வெட்டை நடைமுறைப்படுத்த

11 >

## 37 இராஜாங்க அமைச்சர்கள்; நியாயமற்ற செயற்பாடு

ஹர்ஷ டி சில்வா கடும் காட்டம்



கொழும்பு, செப்.9

நாட்டு மக்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 37 இராஜாங்க அமைச்சர்களை நியமித்துள்ளார். இது

11 >



## சிறிலங்கா வருகிறார் சமந்தா

கொழும்பு, செப்.9

ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி முகவரகத்தின் நிர்வாகி சமந்தா பவர், இருநாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு சிறிலங்கா வரவுள்ளார். இந்தத்தகவலை சிறிலங்கா

11 >

## மரக்கிளை தறித்தவர் தவறி வீழ்ந்து சாவு!

யாழ்ப்பாணம், செப்.9

மரக்கிளைகளைத் தறிப்பதற்காக மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

11 >

## கொரோனா: ஐவர் பலி!

கொழும்பு, செப்.9

கொரோனாத் தொற்றால் மேலும் ஐவர் உயிரிழந்துள்ளனர் என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது. இந்த உயிரிழப்புக்கள் சுகாதார சேவைகள் பணிப் பாளரால் நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. உயிரி

11 >



## மகாராணி எலிசபெத் காலமானார்

லண்டன், செப்.9

பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத் நேற்றுத் தனது 96ஆவது வயதில் காலமானார்.

11 >

## யாழில் பாண் விலை இனியும் 200 ரூபாவே!

யாழ்ப்பாணம், செப்.9

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒரு இறாத்தல் பாண் தொடர்ந்தும் 200 ரூபாவுக்கே விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெதுப்பக உற்பத்தியாளர்கள் மற்றும் உரிமையாளர்கள் இது தொடர்பில் யாழ்ப்பாணம்

11 >

## நாடாளுமன்றத்தில் நேற்று புதிய சட்டம் நிறைவேற்றம்

கொழும்பு, செப்.9

சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்ட வரைவின் இரண்டாம் வாசிப்பு நாடாளுமன்றத்தில் நேற்று 81 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. சட்ட வரைவுக்கு ஆதரவாக 91 வாக்குகளும், சட்ட வரைவுக்கு எதிராக 10 வாக்குகளும் வழங்கப்பட்டிருந்தன. சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்ட வரைவு நேற்று நாடாளுமன்றத்தில்விவாதத்துக்கு

11 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்பு பவுண்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வரணி பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு, சதுரங்கம் தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு வரணி இடைக்குறிச்சி சிறீசுப்பிரமணிய வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ய-159)

# அமைச்சுப் பதவியேற்பில் மொட்டுக் கட்சி பேராதிக்கம்

## 37 பேரில் 29 பேர் பெரமுனவினர்

**கொழும்பு, செப். 9**

**இராஜாங்க அமைச்சர்களாக நேற்று பதவியேற்ற 37 பேரில் 29 பேர் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களாவர்.**

அத்துடன், சுதந்திரக்கட்சியை சேர்ந்த 6 பேருக்கும், ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ஆளுங்கட்சி பக்கம் தாவிய அரவிந்தகுமார், டயானா கமகே ஆகியோருக்கும் இராஜாங்க அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இராஜாங்க அமைச்சர்கள் பட்டியலில் மூன்று பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

சீதா அரம்பேபொல சுகாதார இராஜாங்க அமைச்சராகவும், கீதா குமாரசிங்க பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார இராஜாங்க அமைச்சராகவும், டயானா கமகே சுற்றுலா இராஜாங்க அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ-44)

# வழமைபோன்று கட்சித் தீர்மானத்தை கடாசிவிட்டு பதவியேற்ற சு.க.வினர்

கொழும்பு, செப். 9

கட்சியின் தீர்மானத்தை கடாசித் தள்ளிவிட்டு, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மேலும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை ஏற்றுள்ளனர்.

சர்வகட்சி அரசாங்கம் அமையும்வரை எந்தவொரு அமைச்சுப் பதவிகளையும் பொறுப்பேற்பதில்லை என்ற தீர்மானத்தை சுதந்திரக்கட்சி எடுத்திருந்தது.

எனினும், இந்த முடிவைமீறி ஏற்கனவே நிமல் சிறிபாலடி சில்வா, மஹிந்த அமரவீர ஆகியோர் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டனர். சாந்த பண்டார, சுரேன் ராகவன் ஆகியோரும் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

இராஜாங்க அமைச்சு பதவிகளை பெற்றுக்கொண்ட இருவரும், கட்சியில் இருந்து நீக்கப்பட்டாலும், அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டவர்கள் நீக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மேலும் நால்வர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இராஜாங்க அமைச்சர்களாக நேற்று பதவியேற்றனர்.

இதன்படி ஜகத் புஷ்பகுமார வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சராகவும், ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நிதி இராஜாங்க அமைச்சராகவும், லசந்த அழகியவன்ன போக்குவரத்து இராஜாங்க அமைச்சராகவும், சாமர சம்பத் தசநாயக்க ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஒ-44)

# தமிழ் கைதிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்தவருக்கும் இராஜாங்க அமைச்சு

## போராட்டக்காரர்களைத் தாக்கிய சந்தேகநபருக்கும் அமைச்சுப் பதவி

கொழும்பு, செப். 9

சிறைச்சாலைக்குள் அத்துமீறி நுழைந்து தமிழ் அரசியல் கைதிகளுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் சிக்கிய முன்னாள் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு, பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, காலி முகத்திடல் அறவழி போராட்டக்காரர்கள்மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்ட ஆளுங்கட்சி அரசியல்வாதிகளுள் பிரதானமானவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவுக்கும் இராஜாங்க அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது.

நீதித்துறையை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டுக்கும் இவர் இலக்காகியுள்ளார். நீதிமன்றத்தில் வழக்குச் [illegible] தொடுக்கப்பட்டுள்ளது. (ஒ-44)

# பொருண்மியம் நலிந்தோருக்கு நிறுவனங்களால் நிதியுதவிகள்

சாவகச்சேரி, செப். 9

தென்மராட்சிப் பிரதேசத்தில் பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்ட நிறுவனம் மற்றும் வேள்ட் விஷன் லங்கா நிறுவனம் ஆகியவை 4 மாதங்களுக்கு நிதி யுதவிகளை வழங்கவுள்ளன.

உலக உணவு நிறுவனத்தால் பிரதேசத்தில் உள்ள பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவிகள் இருவேறு பிரிவுகளாக வழங்கவுள்ளன. ஏற்கனவே சமுர்த்தி உதவியாக 7 ஆயிரத்து 500 ரூபாவைப்பெறும் 4 பேருக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு மேலும் 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் 15 ஆயிரம் ரூபாவும், கர்ப்பிணித்தாய்மார், பாலூட்டும் தாய்மார் மற்றும் விசேட தேவையுடையோர் உட்பட ஏனையோருக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதமும் வழங்கவுள்ளனர்.

இதேவேளை வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தினர், பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பொருண்மியம் நலிவடைந்த 500 குடும்பங்களுக்கு 4 மாதங்களுக்கு தலா 18 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவுள்ளனர். இதற்கென ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்கள் அந்தந்த கிராம அலுவலர்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளது. (ஒ-14,9)

# கஞ்சாவை சட்டபூர்வமாக்கி டொலரைத் திரட்டுவோம்

## பதவியேற்றவுடன் டயானா கமகே தெரிவிப்பு

கொழும்பு, செப். 9



கஞ்சாவை சட்டப்பூர்வமாக்கி, அதன்மூலம் அந்நிய செலாவணியை திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.

இதேவேளை, போராட்டக்காரர்கள், குடுகாரர்கள், போக்கிரிகள், அவர்கள் தொடர்பில் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று குறிப்பிட்ட நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, மக்கள் என்னை ஏற்றுக்கொண்டுள்ளனர். அதனால்தான் மூன்று தடவைகள் மாவட்டத்தில் முதலிடம் பிடித்தேன். ஜனாதிபதி பதவி விலகினாலும், நாம் இன்னும் மக்களால் நிராகரிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். (ஒ-44)



# சனசமூக நிலையம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், செப். 9

கரணவாய் வடமேற்கு சிறி அம்பாள் சனசமூக நிலையம, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கரணவாய் வடமேற்கு சிறி அம்பாள் மழலைகள் கல்வி பூங்கா மாணவர்களின் வருடாந்த விளையாட்டு போட்டியும் இடம்பெற்றது.

சிறி அம்பாள் சனசமூக நிலையத்தின் தலைவரும் கரவெட்டி பிரதேசசபையின் உறுப்பினருமான நடராஜசுந்தரம் சுதாகரின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், கரவெட்டி பிரதேசசபை உறுப்பினர்கள், சனசமூக நிலையத்தின் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஒ-14,125)

# நாவற்குழி ரயில் நிலையத்தில் பெண்ணின் கைப்பை திருட்டு

சாவகச்சேரி, செப். 9

நாவற்குழி ரயில் நிலையத்தில் பெண்ணின் கைப்பையொன்று நேற்றுத் திருட்டுப் போயுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாவற்குழியில் வசிக்கும் பெண் தென்பகுதியிலுள்ள உறவினர் வீட்டுக்குச் செல்வதற்கு நாவற்குழி ரயில் நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

அதன்போது அவ்வழியாக நடந்து வந்த நபர் குறித்த பெண்ணின் கைப்பையைப் பறித்துக்கொண்டு ஓடினார்.

அதனையடுத்து பெண் கூக்குரலிட்டதும் அங்கு நின்ற பொலிஸார் உள்ளிட்ட பலர் திருடனை துரத்திச்சென்ற போதும் திருடன் தப்பிச் சென்றுள்ளான் எனத் தெரிவிக்கப்பட்டது. மேலும் பெண்ணின் கைப்பையில் 9 ஆயிரம் ரூபா பணம் இருந்ததென பெண் தெரிவித்தார். (ஒ-14,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி நெருக்கடியாலேயே நெல் கொள்வனவு நிறுத்தம்

கொழும்பு, செப். 9

இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியன நெல் சந்தைப் படுத்தல் சபைக்கு பணத்தை வழங்க மறுத்ததன் காரணமாக நெல் கொள்வனவை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

நெல் கொள்வனவு செய்வதற்காக இரண்டு அரச வங்கிகளிடமும் தலா ஒரு பில்லியன் ரூபா கடனாக நெல் சந்தைப்படுத்தல் சபை பெறுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கிய போதிலும், இரண்டு வங்கிகளும் பணத்தை வழங்க மறுத்து வந்தன. சபைக்கு இரண்டு பில்லியன் ரூபா கடன் தொகையை வழங்குவதற்கு மத்திய வங்கியின் சான்றிதழ் தேவைப்படுவதாக சம்பந்தப்பட்ட வங்கிகள் தெரிவித்துள்ளன.

நெல் சந்தைப்படுத்தல் சபையால் இவ்வருடம் கொள்வனவு செய்யப் பட்ட முப்பதாயிரம் மெற்றிக் தொன் நெல் இருப்புக்களை அடகுப் பிணைப் பொருளாக வைத்து, பணம் கோரியுள்ள போதிலும் வங்கிகள் கடன் வழங்க மறுத்துள்ளன.

இதனாலேயே நெல் சந்தைப்படுத்தல் சபை விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையை இடை நிறுத்தி உள்ளது. (ஒ-இ)



## மணல் கடத்தல்; டிப்பருடன் சாரதி கைது!

யாழ்ப்பாணம், செப். 9

அனுமதிப்பத்திரமின்றி கடற்கரை மணல் கடத்தியவர் டிப்பருடன் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பளைப்பகுதியில் இருந்து கடற்கரை மணலைக் கடத்தி அச்சுவேலி நோக்கி டிப்பர் வாகனமொன்று பயணித்துக்கொண்டிருக்கின்றது என்று அச்சுவேலிப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய கொடிகாமம் வீரவாணிப் பகுதியில் குறித்த டிப்பரை வழிமறித்து சோதனையிட்டனர். அதன் போது அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்தமை தெரியவந்தது.

அதனையடுத்து மணல் கடத்திய குற்றச்சாட்டில் புத்தூர் கலைமதி பகுதியைச் சேர்ந்த சாரதி கைது செய்யப்பட்டதுடன் டிப்பர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14,23)

## மூன்றரை மாத அறுவடை புதுவகை நெல் அறிமுகம்

கொழும்பு, செப். 9

மூன்றரை மாதங்களில் அறுவடை செய்யக்கூடிய புதிய நெல்வகை ஒன்று கண்டறியப்பட்டுள்ளது.

காலி - லபுதுவ அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தால் இந்தப் புதிய வகை நெல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'எல்.டி- 376' எனப் பெயரிடப்பட்டுள்ள குறித்த நெல்லை நாட்டின் எந்தப் பகுதிகளிலும் பயிரிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சிகரெட் புகைத்த மாணவிகள் சிக்கினர்

கொழும்பு, செப். 9

பாடசாலை மலசல கூடத்துக்குள் சிகரெட் புகைத்துக்கொண்டிருந்த மூன்று மாணவிகள் கையும் களவுமாக சிக்கியுள்ளனர்.

புத்தளம் ஆனமடுவ பிரதேசத்திலுள்ள பாடசாலையில் தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவிகளே இவ்வாறு சிகரெட் புகைத்துள்ளனர்.

குறித்த மாணவிகளில் ஒரு மாணவியின் தந்தை வீட்டுக்கு சிகரெட்களை வாங்கி வந்துள்ளார். அதிலிருந்து இரண்டொன்றை எடுத்து வந்த மாணவி தனது சக நண்பிகளுடன் பாடசாலை மலசல கூடத்துக்குள் புகை பிடித்த வேளையே சிக்கியுள்ளனர்.

அதனையடுத்து பாடசாலையின் அதிபர் மற்றும் நிர்வாகத்தினர், குறித்த மாணவிகளின் பெற்றோரை அழைத்து, கடுமையாக எச்சரித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14.இ)



## யாழ்ப்பாண மாநகரசபைக்கு புதிய தீயணைப்பு வாகனம்

யாழ்ப்பாணம், செப். 9

யாழ்ப்பாண மாநகரசபைக்கு புதிய தீயணைப்பு வாகனம் ஒன்று இந்த மாத நடுப்பகுதியில் கையளிக்கப்படவுள்ளது.

யாழ். மாநகரசபை தீயணைப்புப் பிரிவில் இருந்த தீயணைப்பு வாகனம் கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நீர்வேலியில் இடம்பெற்ற விபத்தில் முழுமையாக சேதமடைந்தது.

அதன்பின்னர் மாநகர சபைக்கான தீயணைப்பு வாகனம் இல்லாதிருந்ததுடன் இது தொடர்பில் அந்த ஆண்டே அரசாங்கத்துக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. எனினும் அதற்கான பதில் இன்றுவரை கிடைக்கவில்லை.

இந்த நிலையில் யாழ். மாநகரசபைக்கு தீயணைப்பு வாகனம் அவசியம் தேவையென்பதைக் கருத்திற்கொண்டு, நன்கொடையாளர்களின் நிதிப்பங்களிப்பில் புதிய தீயணைப்பு வாகனம் ஜப்பானில் இருந்து கொண்டு வரப் பட்டது.

குறித்த தீயணைப்பு வாகனத்தின் நீர் விசிறும் பரீட்சார்த்த நிகழ்வு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அனைத்து சோதனைகளும் முடிவடைந்த பின்னர் இந்த மாத நடுப்பகுதியில் தீயணைப்பு வாகனம் யாழ். மாநகரசபையிடம் கையளிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,27)

# யாழ். மாநகர ஆணையாளருக்கு எதிராக ஆளுநரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 9

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளர், சபை மாண்புகளைக் கொச்சைப்படுத்தும் வகையில் நடந்து கொள்கிறார் என்றும், சபையைப் பிழையாக வழி நடத்திச் செல்கிறார் என்றும் மாநகர சபை உறுப்பினர் ஒருவரால் வடக்கு மாகாண ஆளுநரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் திண்மக் கழிவகற்றல் செயற் பாடுகளுக்கென ஜப்பான் அரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட நான்கு வாகனங்களைப் பெற்றுக் கொள்வதென்று சபைத் தீர்மானத்திருந்தது. ஆனால் அதற்கு முரணாகத் தொடர்பாடலை மேற்கொண்டு, 'சபையில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் குறிப்பிடட்ட வாகனங்களை யாழ். மாநகரசபை பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாகச் சபை முடிவு செய்துள்ளது' என்று இலங்கையிலுள்ள ஜப்பானியத் தூதரகத்துக்கு ஆணையாளரால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது கண்டனத்துக்குரிய ஒரு செயற்பாடு என்றும், சபையின் தீர்மானங்களை உரிய முறையில் செயற்படுத்தத் தவறும் மாநகரசபை ஆணையாளர், சபைக்குத் தெரியாமல் சபையின் பெயரால் வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றுக்குக் கடிதம் அனுப்பியதுடன், சபைக்கு நன்கொடையாகக் கிடைக்க வேண்டிய சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளவிடாமல் சபைக்கு இழப்பை ஏற்படுத்தியுள்ளார். எனவே இது பற்றி வடக்கு மாகாண ஆளுநர் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் யாழ். மாநகரசபை உறுப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜப்பான் அரசாங்கத்தால் வழங்கப்படவிருந்த நன்கொடை வாகனங்களின் தீர்வைக்கென அந் நாட்டுத் தூதரகத்தால் யாழ். மாநகரசபைக்கு வழங்கப்பட்ட நிதியைத் தூதரகம் மீள வழங்குமாறு கோரியிருந்தது. இதனையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடியதன் அடிப்படையில் குறித்த வாகனங்களுக்கான வேண்டுகோளை முன்வைக்குமாறு ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அது குறித்து ஜப்பானியத் தூதரகத்துக்கு பதில் முதல்வர் து.ஈசன் எழுத்து மூலம் வேண்டுகோள் அனுப்ப முற்பட்ட போது, மாநகர ஆணையாளர் அதனைத் தடுத்ததன் மூலம் சபை உறுப்பினர்களுக்கான [illegible] மீறியுள்ளார் - [illegible] முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-இ)

## வீமன்காமத்தில் மிதிவெடி மீட்பு



கிளிநொச்சி, செப். 9

பளை வீமன்காமம் பகுதியில் மிதிவெடி ஒன்று நேற்று மீட்கப்பட்டது என்று காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர். வீமன்காமம் பகுதியிலுள்ள காணியொன்றில் சந்தேகத்துக்கிடமான பொருள் காணப்பட்டதையடுத்து, காணி உரிமையாளரால் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமாகக் காணப்பட்ட பொருளை அவதானித்து அது மிதிவெடி என்பதை இனங்கண்டனர்.

அதனையடுத்து நீதிமன்றின் அனுமதியுடன் வெடிபொருளை செயலிழக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைசாகரம் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, செப். 9

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் வருடாவருடம் கலை இலக்கியத்துறைக்கு வழங்கப்படும் "கலைசாகரம்" விருதுக்கு தகைமையுள்ள கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதற்கமைய தென்மராட்சிப் பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட 50 வயதைப் பூர்த்தி செய்த கலை இலக்கியத்துறைக்கு பங்காற்றும், சுயமாக கலை இலக்கியப் படைப்புகளை மேற்கொள்பவர்களுடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

"கலை சாகரம்" விருதுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் பிரதேச கலாசாரப் பிரிவுடன் தொடர்புகொண்டு உரிய படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு பிரதேசசெயலர் அறிவித்துள்ளார். (ஓ-14-9)


## இருபத்து மூன்றாமாண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 13 . 06 . 1981

சந்நிதியான் அடியில் 25 . 08 . 1999



### செல்வி திருமகள் கனகசபை

திதி : சதுர்த்தசி

மால் மருகன் மணக்கோலம் கண்டிருந்தும் போதாமல்
வேல் முருகன் தேரேறும் காட்சியையும் காண வென
காலனவன் கூட வரும் சேதி கூட தெரியாமல்
கோலமயில் வாகனனை தேடி நீயும் சென்றாயே!

இருபதொடு மூன்றாண்டு உருண்டோடி சென்றாலும்
திருமகளின் நினைவேதும் அகலாது எமை விட்டு
வருமடியார் குறை தீர்க்கும் வடிவேலன் திருக்கருணை
திருவுளம் கொண்டு உன்னை தன்னடியில் சேர்த்ததுவோ!

125, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
மீசாலை வடக்கு, மீசாலை.

உன் நினைவால் வாடும்:
பெற்றோர்,
சகோதரர்கள்,



## 1st Death Anniversary

*"I am the resurrection and the life. The one who believes in me will live, even though they die; and whoever lives by believing in me will never die."*
John 11: 25-26

02 - 09 - 1949



09 - 09 - 2021

### Rajaratnam Sribalaratnam

(Retired Customer Service Manager – Bank of Ceylon, Jaffna)

*Your Life was a Blessing*
*Your Memory a Treasure*
*You are Loved Beyond Words*
*and Missed Beyond Measure!*

58, Vembady Road,
Jaffna

Fondly Remembered By;
Wife, Children &
Family Members

(CS 20673) (3/6)



# மரண அறிவித்தல்

## ஸ்ரீமதி பத்மாவதி நன்னித்தம்பி (புன்னாலைக்கட்டுவன்)



மலேசியாவை பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் தெற்கை வாழ்விடமாகவும் கொண்ட ஸ்ரீமதி பத்மாவதி நன்னித்தம்பி நேற்று (08.09.2022) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சினியர் அம்பலவாணர் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இளையதம்பி வன்னிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்திய கலாநிதி நன்னித்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், தயாவதி (கனடா) அவர்களின் அன்புத் தாயாரும், மண்டலசேகரம் சபாநடேசன் அவர்களின் அன்பு மாமியாரும், வினோத், சஜித் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி தர்மலிங்கம், தேவி (தேவி ரீச்சர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாடநூல் ஆசிரியரும் சுகாதார போதனாசிரியருமான காலஞ்சென்ற தர்மலிங்கம் அவர்களின் அன்பு மைத்துனியும், லோகராணி-பாலேந்திரன், விஜயராணி -பத்மநாதன், யோகராணி-வன்னியசேகரம், தர்மராணி-ஜெகநாதன், சண்முகதாசன் (ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர்), யுகேந்திரராஜா, நந்தகுமாரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி), காலஞ்சென்றவர்களான வைத்திய கலாநிதி இந்திராணி சத்தியநாதன், சிறீஸ்கந்தராஜா, தயாபரன், முரளிதரன் ஆகியோரின் அன்பு சிறிய தாயாரும், உமேஷ்-ஷியாமளா, ரமேஷ்-உஷா, யதிஷ்-கல்பனா, நந்தினி-யோகேஸ்வரன், ரஜனி-பிலிக்ஸ், கரிகரன், காலஞ்சென்ற மயூரன், லிங்கரன்-பத்மலோஜினி, சுதாகரன்-சுகன்யா, லௌமீகரன்-சுகந்தி, பிங்கலன் -தக்சினி, ஷேந்தன்-கீர்த்தனா, கரிகேஷன்-மதுரா, லவண்யா, லவகேஷன், கோசல்யா, தனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிலிசியா-டிலோரன்ஸ், யோகானி, வலனிசியா, கௌசிகா, சுவஸ்திகா, ரிஷிக்கா, நிவேசிக்கா, கிஷான், பிரவீன், நயனிகா, ஆர்த்திக், ஆடாஸ், வைசிகா, சயுந்தன், அபிஷேக் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (09.09.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் விலங்கன் மயானத்திற்கு தகனக்கிரியைளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆயாக்கடவை பிள்ளையார் கோயில் முன் ஒழுங்கை
(பூதவராயர் கோயிலடி)
புன்னாலைக்கட்டுவன்

தகவல்:
த.நந்தகுமாரன்
[illegible]
0771 298 159, 021 224 0950

தோற்றம் 02.07.1930

மறைவு 08.09.2022


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## காரணம் ஐ.நா. மட்டுமல்ல

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை கொழும்புக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அரசாங்கத்தின் பதிலுக்காக, அமர்வு ஆரம்பமாக முன்னரே இவ்வாறு அறிக்கை வழங்கப்படுவது வழமையே. அந்த அடிப்படையில் இலங்கை அரசாங்கத்திடம் வழங்கப்பட்ட அறிக்கை தற்போது வெளியே கசிய விடப்பட்டிருக்கின்றது.தமிழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கைகள் ஆணையாளரின் அறிக்கையில் வழமைபோன்று கண்டுகொள்ளப்படாமலே விடப்பட்டுள்ளன. தூக்கிக் கொண்டாடக் கூடியளவுக்கு தமிழ் மக்களுக்கு அந்த அறிக்கையில் பெரிதாக ஒன்றுமில்லை.

இலங்கையில் போர்க்குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக உலகளாவிய நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்குமாறு இப்போது அல்ல இதற்கு முன்னரும் கோரப்பட்டிருந்தது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராக இருந்த சயிட் அல் ஹுசைன் இந்தக் கோரிக்கையை முதலில் முன்வைத்திருந்தார். இப்போது பச்லெட் அம்மையார் அதேகோரிக்கையை வலுப்படுத்தியிருக்கின்றார். இந்தக் கோரிக்கையை சயிட் முன்வைத்து 4 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. ஆனால் அதன் ஊடாக எந்தவொரு காத்திரமான நடவடிக்கையும் இலங்கைக்கு எதிராக எடுக்கப்படவில்லை. மாறாக இலங்கை விவகாரத்தை தொடர்ந்தும் பேசுபொருளாக வைத்திருப்பதற்கு மாத்திரமே சர்வதேச சமூகம் விரும்புகின்றது.


பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்களின் குரலுக்கு சர்வதேச சமூகமோ, ஐ.நா. மன்றமோ செவிசாய்ப்பதற்குத் தயாரில்லை. அவர்கள் மீண்டும் மீண்டும் தங்கள் நிகழ்ச்சி நிரலுக்குள், எங்கள் விவகாரங்களைப் பயன்படுத்துகின்றார்கள் என்பது மாத்திரமே தெளிவு. ‘இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துவதற்கான முன்னகர்வுகளை மேற்கொள்ளுங்கள்’ என்று பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பல ஆண்டுகளாகக் கோரி வருகின்றார்கள். ஜெனிவா அமர்வு ஆரம்பமாவதற்கு முன்னர், தமிழ்த் தரப்புக்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்திக் கடிதம் அனுப்புவது வழமை.

ஆனால் ஐ.நா. அந்த விடயத்தைக் கண்டுகொள்ளவில்லை. பாதிக்கப்பட்ட சமூகத்துக்காக குரல் கொடுப்பதாகச் சொல்பவர்கள், அந்தப் பாதிக்கப்பட்ட சமூகத்தின் கோரிக்கையைக் கூட கண்டுகொள்ளாமல், அந்தச் சமூகத்தின் சார்பில் தமக்குத் தேவையானவற்றை மட்டும் நிறைவேற்றும் விந்தைதான் நடந்தேறி வருகின்றது. இந்த ஆண்டும் அது தொடரத்தான் போகின்றது என்பதை ஐ.நா. ஆணையாளரின் அறிக்கை வெளிப்படுத்தி நிற்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் இலங்கையை ஒன்றும் செய்ய முடியாது என்பது தெரிந்திருந்தும், அதன் கையாலாகாத்தனத்தை அறிந்திருந்தும், இலங்கை விடயத்தை அந்தச் சபையில் தேக்கி வைத்திருப்பதற்கு தமிழ்த் தலைமைகள் சிலரும் உதவுகின்றார்கள். ஐ.நா. ஆணையாளரே, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் செய்ய முடியாது என்பதால் தான் உலகளாவிய நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்குமாறு உறுப்பு நாடுகளைக் கோருகின்றார்.

முன்னைய ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் இவ்வாறு கோரிக்கை விடுத்தபோதே, இலங்கை விடயத்தை கையாளும் தமிழ்த் தலைமைகள், ஐ.நா. பாதுகாப்புச் சபை ஊடாக சர்வதேச நீதிமன்றுக்கு இலங்கையைப் பாரப்படுத்துமாறு கேட்டிருக்கலாம். அப்போதெல்லாம், அது சாத்தியமில்லை என்று கூவித்திரிந்தவர்கள், இப்போது பாதுகாப்புச் சபைக்குப் பாரப்படுத்தவேண்டும் என்றும், இலங்கை தொடர்பில் கடுமையான பிரேரணை வரவேண்டும் என்றும் கேட்கின்றார்கள்.தமிழ் மக்களுக்கான நீதி கிடைக்காமல் காலம் தாழ்ந்து செல்வதற்கு சர்வதேச சமூகம், ஐ.நா. மன்றம் மட்டுமல்ல இந்தக் கோடரிக்காம்புத் தலைமைகளும் காரணம்தான்.

### நாளொரு நல்வார்த்தை

“உலகம் ஓர் ஏணி. சிலர் மேலே ஏறுவதற்குப் பயன்படுத்துகிறார்கள். சிலர் கீழே இறங்குவதற்குப் பயன்படுத்துகிறார்கள்” - **மார்க்ஸ்**




### இலங்கை விவகாரம்

# இந்தியாவும் ஜப்பானும் ஒரு புள்ளியில் நிற்கின்றன

**சென்னை, செப். 9**

**ஜப்பான் இலங்கையில் ஆழமான வேர்களைக் கொண்டுள்ளது மற்றும் மக்கள் சார்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்கு இந்தியாவும் ஜப்பானும் இலங்கைக்கு ஆதரவாக நிற்கின்றன என்று இந்திய இராணுவத்தின் ஓய்வுபெற்ற லெப்டினன்ட் ஜெனரல் சங்கர் தெரிவித்தார்.**

இந்தியப் பீரங்கிப் படையணித் தளபதியாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற லெப். ஜெனரல் சங்கர், இலங்கையில் சீனாவின் தாக்கத்தை முறியடிக்க இந்தியாவும் ஜப்பானும் ஒன்றிணைய முடியும் என வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இடம்பெற்ற நிகழ்விலேயே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் காலத்தில் இருந்ததைப் போல, இந்தியா மீண்டும் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக இலங்கை கருதக் கூடாது. இது இந்தியாவை ஓரங்கட்டுவதற்கு வழிவகுத்தது மற்றும் சீனா இலங்கைக்குள் நுழைவதற்கான இடத்தை உருவாக்கியது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

சீனாவின் பொருளாதார மந்தநிலை, உள்நாட்டுப் பிரச்சினைகள் மற்றும் தாய்வான் மற்றும் அமெரிக்கா மீதான அதன் ஆர்வத்தில் இந்தியாவின் வாய்ப்பு உள்ளது என்று அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஐ.எம்.எப். பிணை எடுப்பு வருவதற்கும், இந்தியாவுடன் மூலோபாய ரீதியாக ஒன்றிணைவதற்கும் அமெரிக்காவின் ஒப்புதல் அவசியம். இந்தோ - பசுபிக் மூலோபாயத்தை வலுப்படுத்தும் இந்த வாய்ப்பை அமெரிக்கா இழக்காது. இந்தியா மற்றும் ஜப்பானுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் சீனாவின் செல்வாக்கை எதிர்கொள்ள அமெரிக்கா முயற்சிக்கும் என்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

மேலும், இலங்கையுடன் பாகிஸ்தான் எப்போதும் நல்லுறவைக் கொண்டிருந்ததுடன், விடுதலைப் புலிகள் காலத்தில் ஆயுதங்களை வழங்கிய பிரதான நாடாக பாகிஸ்தான் இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஒ-இ)

# கையிருப்பு விவரங்களை வெளியிட்ட மத்திய வங்கி

கொழும்பு, செப்.9

சிறிலங்காவின் கடந்த ஓகஸ்ட் மாத உத்தியோகபூர்வ கையிருப்புத் தொடர்பான அறிவிப்பை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

சிறிலங்காவின் அந்நியச் செலாவணி கையிருப்பு 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாத இறுதியில் ஆயிரத்து 716 மில்லியன் அமெரிக்க டொலர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி, ஜூலை மாதத்தில் அறிவிக்கப்பட்ட அந்நியச் செலாவணி கையிருப்பு ஆயிரத்து 817 மில்லியன் அமெரிக்க டொலர், ஓகஸ்ட் மாதத்தில் குறைவடைந்துள்ளது. இது 5.3 சதவீதம் வீழ்ச்சியாக பதிவாகியுள்ளது.(எ-இ)

**நாளை**
**10.09.2022**
**சனிக்கிழமை**
**ஆவணி 25**
சுபநேரம் : 03.03 - 04.33
ராகுகாலம்: 09.03 - 10.33
**பூரணை விரதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். புதிய முயற்சி பலன் தரும். நீண்ட நாள் முயற்சி ஒன்று நிறைவேறும். உங்கள் எண்ணம் பலிதமாகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**இடபம்:** வருவாயில் இருந்த தடை விலகும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். விவேகமுடன் செயற்பட்டு திட்டமிட்ட செயலை செய்து முடிப்பீர்கள். பணியிடத்தில் உங்களின் செல்வாக்கு கூடும்.

**மிதுனம்:** அலைச்சல் அதிகரிக்கும். வருமானத்தில் தடை உண்டாகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். செயலில் கவனம் தேவை. திடீர்ப் பயணம் ஏற்படும். உங்கள் எதிர்பார்ப்பு இழுபறியாகும்.

**கடகம்:** வாழ்க்கைத் துணையின் உதவியுடன் தள்ளிப்போன சுப நிகழ்ச்சியை நடத்த முயல்வீர்கள். நண்பர்களிடம் ஏற்பட்ட பிரச்சினை முடிவுக்கு வரும். எதிர்பார்த்த வருவாய் உண்டு.

**சிம்மம்:** குலதெய்வ அருளால் முயற்சியில் லாபம் காண்பீர்கள். பொருளாதார நிலை உயரும். நண்பர்களின் உதவியுடன் எதிர்ப்புகளை வெல்வீர்கள். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். எதிர்பாரா வருவாய் வரும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி:** எதிர்பார்த்த வரவு வந்து சேரும். குடும்பத்துக்காக சேமிப்பை ஏற்படுத்து வீர்கள். வியாபாரத்தில் உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் நன்மை உண்டாகும்.

**துலாம்:** உங்கள் செல்வாக்கு இன்று பிறருக்கு தெரியவரும். முயற்சியில் ஆதாய நிலை தோன்றும். ஆசைகளுக்கு இடம் கொடுக்காமல் செயற்பட்டால் முயற்சிகளில் லாபம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** பணம், நகைகளை கையாளுவதில் கவனம் வேண்டும். இல்லையெனில் இழப்பு ஏற்பட வாய்ப்புண்டு. உங்கள் எண்ணத்தில் ஒன்று நிறைவேறும். நண்பர்கள் உதவியால் ஆதாயம் காண்பீர்கள்.


**தனுசு:** நேற்று வரை இழுபறியாக இருந்த ஒரு செயல் இன்று நிறைவேறும். வேலை இடத்தில் உங்கள் உழைப்பைப் பாராட்டுவர். யோகமான நாள். இறை சிந்தனை அதிகரிக்கும்.

**மகரம்:** இனம் புரியாத குழப்பம் ஏற்படும். செயலில் கவனம் செலுத்த முடியாத நிலை உண்டாகும். மனம் விரும்பும் வகையில் செயற்படுவீர்கள். எதிர்பார்ப்புகளில் ஏமாற்றம் உண்டாகும். துணிச்சலுடன் செயற்படுவீர்கள்.

**கும்பம்:** செலவுகள் கூடும். அரசு வழி முயற்சியில் தடையும் தாமதமும் ஏற்படும். ஆடம்பர செலவுகள் செய்து சங்கடத்துக்கு ஆளாவீர்கள். அலைச்சல் அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளால் பணத் தட்டுப்பாடு ஏற்படும்.

**மீனம்:** வருமானத்தில் உண்டான தடைகள் விலகும். மகிழ்ச்சியான நாள். உங்களை விட்டு விலகிச்சென்றவர்கள் மீண்டும் வருவார்கள். ஆசை ஒன்று நிறைவேறும். செயலில் வெற்றி காண்பீர்கள். நிதிநிலை உயரும்.






வவுனியா பாவற்குளம் படிவம் 1 அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பஞ்சகுண்ட மஹா கும்பாபிஷேகம், ஆலய பிரதமகுரு சிவசிறீ ஜெகதீஷ்வர மயூரக் குருக்கள் தலைமையில் அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. (ம-110)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை நூற்றுக்கணக்கான அடியவர்கள் புடைசூழ சிறப்பாக இடம்பெற்றது. (ச)







வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 11ஆம் நாள் திருவிழாவான கைலாய வாகன உற்சவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ச)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில் 1961 . 08 . 10



ஆண்டவன் அடியில் 2022 . 09 . 08

உதயன் ஆசிரியர்பீடத்தில் கடமையாற்றும்
றூ.ராஜப்பிரகாஸின் தந்தையாரான


## எசக்கியேல் றொபேட் றூபநாதன்

அவர்களின் பிரிவுத்துயருக்காக அஞ்சலிப்பதுடன் அன்னாரின்
இழப்பால் வாடும் குடும்பத்தினருக்கு
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**உதயன் குழுமத் தலைவரும்**
**பணியாளர்களும்**

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 - 06 - 1947



இறப்பு 07 - 09 - 2022

## தெய்வேந்திரம் நகுலேஸ்வரன்

புதுவீதி, ஆறுகால் மடத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் நகுலேஸ்வரன் அவர்கள் கடந்த (07.09.2022) புதன்கிழமை இரவு இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம் கமலாம்பிகை தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு நாகம்மா தம்பதிகளின் மருமகனும், நித்தியகௌரி அவர்களின் அன்புக் கணவரும், ஜெயகாந்தன் (கொலண்ட்), காலஞ்சென்ற ஜெயதாரகன் (கீர்த்தி) மற்றும் ஜெயதர்சன் (மயூ), ஜெயப்பிரதா (அனோ - கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவதாரணி (கொலண்ட்), செந்தில் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், விஷாலி, வைஷாலி, அட்விகா, தன்விகா ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், கீர்த்திசிங்கம், ஏலாளசிங்கம் மற்றும் லோகநாயகி, சுசீலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்கு யாழ். கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதுவீதி,**
**ஆறுகால்மடம்**

**077 917 0357**

(CS 20688) (3/6)

தகவல்:
குடும்பத்தினர்

## பயிற்சிநெறி நிறைவு சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாண மாவட்டச் செயலகமும், ஐ.ஓ.எம். நிறுவனமும் இணைந்து மேற்கொண்ட கனரக வாகனங்களுக் கான பயிற்சிநெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு உதவி மாவட் டச் செயலர் எஸ்.சி.என்.கமலரா ஜனின் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கொரோனாத்தொற்றுக் காரணமாக வெளிநாடுகளிலிருந்து வந்து வேலை யற்றிருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் யாழ். மாவட்டச் செய லரின் வேண்டுகோளுக்கு அமைவாக ஐ.ஓ.எம். நிறுவனத்தால் இந்த பயிற்சி நெறி வழங்கப்பட்டது. (ம-14-27)

# மரண அறிவித்தல்

## எசக்கியேல் றொபேட் றூபநாதன்



யாழ்ப்பாணம், ஊறணியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாக வும் கொண்ட எசக்கியேல் றொபேட் றூபநாதன் நேற்று (08.09.2022) வியாழக்கிழமை இயற்கை எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆபேல் குணமணியின் அன்பு மகனும் பத்தினாதர், திரேசம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும் திரேசா மேரியின் (ராணி) அன்புக் கணவரும் ராஜப்பிரகாஷின் பாசமிகு தந்தையும் சாளினியின் அன்பு மாமனாரும் ஆவார்.

காலஞ்சென்றவர்களான செல்வநாதன் மேரிஸ்ரெலா, ஜெகநாதன் மற்றும் புஸ்பநாதன், அழகநாதன், நோயலா அருட்சகோதரி நிர்மலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.09.2022) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**தகவல்: குடும்பத்தினர்**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்:
பிலிப்பியர் : 1:21

## கென்றிக் பிரகாசம் (ஐயா)

Hendrik Pragasam



கனவில் கூட நினைக்கவில்லை அப்பா
காலம் உங்களை பிரிக்கும் என்று
ஆலம் விழுது போல்
ஆயிரம் உறவு கொண்டு
கரம் பிடித்த காலம் முதல்
முத்தாக எட்டு பிள்ளைகளை
சொத்தாக கண்டீர்
உங்களை கனவில் தினமும்
காண்கின்றோம்
ஏங்கி எழுந்து ஏமாந்து
போகின்றோம்
நடந்தது அனைத்தும் கனவாகிப்
போகாதா என்று ஏங்குகின்றோம்.

**உங்கள் பிரிவில் வாடும்:**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**
**பிரான்ஸ் - இத்தாலி, டென்மார்.**
**தகவல் : மகள்- ஸ்ரீபன் எமிலி**


மண்ணில் 25.07.1932
விண்ணில் 09.08.2022

(cs 46928) (2.6)

# 10 ஆம் ஆண்டு நினைவு நாள்

## அமரர் இளையதம்பி அருமைநாதன்

(அருமை)



அன்னை மடியில் 06.10.1954

ஆண்டவன் அடியில் 29.08.2012

திதி: வளர்பிறை சதுர்த்தசி [09.09.2022]

அப்பா ! காலங்கள் கடந்தாலும்
மறக்க முடியாது உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் தொடரும் அப்பா!

**உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டுகிறோம்**
**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

[illegible] வீதி,
[illegible]வில் மேற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்

(cs 46928) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பேருந்து சேவைக்கு சீரற்ற முறையில் எரிபொருள்

### மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்து சங்கம் கவலை

மன்னார், செப். 9

மன்னார் மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் போக்குவரத்து சேவை பேருந்துகளுக்கு சீரான முறையில் டீசல் விநியோகம் தற்போது இடம்பெறுவதில்லை. இதனால் எமது சேவையை மட்டுப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்து சங்கத்தின் செயலாளர் எம். வாகேசன் கவலை தெரிவித்துள்ளார் .

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் மாவட்டத்தில் 75 தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பணிகளுக்குச் செல்வோரின் நலன்கருதி எமது சேவை முன்னெடுக்கப்படுகிறது.

முன்பு மன்னார் இலங்கை போக்குவரத்து சபையின் கட்டுப்பாட்டில் எரிபொருள் விநியோகம் இருந்தபோது அவர்களிடமிருந்து எரிபொருளை பெற்றுவந்தோம்.

தற்போது வடக்கு மாகாண வீதி போக்குவரத்து அதிகார சபைக்கு எரிபொருள் விநியோகம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் எமக்குரிய டீசல் சீரான முறையில் கிடைப்பதில்லை. இதனால் தனியார் பேருந்து சேவையை மட்டுப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி எரிபொருளை சீரான முறையில் விநியோகிக்க வழிவகை செய்யவேண்டும் -என்றார். (ச-60)

# வல்லிபுர ஆழ்வார் பெருந்திருவிழா 24ஆம் திகதி ஆரம்பமாகிறது

### முன்னேற்பாடு தொடர்பில் விசேட கலந்துரையாடல்

**யாழ்ப்பாணம், செப். 9**

**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் இடம்பெற்றது.**



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது சுகாதார நடைமுறைகளை பின்பற்றுதல் அவசியமானது, பக்தர்கள் ஆசார சீலர்களாக ஆலயத்துக்கு வருகைதர வேண்டும், ஆலய சுற்றாடலில் உணவு கையாளும் நிலையங்களை அமைப்பவர்கள் நாட்டின் எந்தப் பாகத்திலாவது பதிவு செய்யப்பட்ட உணவுச் சாலைகள் நடத்துபவர்களாக இருத்தல் வேண்டும், சகல உணவு கையாள்பவர்களும் தாங்கள் பணிபுரியும் பதிவு செய்யப்பட்ட உணவுச்சாலை அமைந்துள்ள பிரதேச சுகாதார மருத்துவ அதி காரி பணிமனையிலிருந்து பெறப்பட்ட மருத்துவச்சான்றிதழ் பெற்றிருப்பதுடன் அதனை தங்களுடன் வைத்திருக்க வேண்டும், பொதுச்சுகாதார பரிசோதகரின் கண்காணிப்புக்குட்பட்ட கிணறுகளிலிருந்து பெற்றப்படும் குடிதண்ணீரையே உபயோகிக்க வேண்டும், ஆலயச் சுற்றாடலில் இனிப்புக்கடைகள், கச்சான் விற்பவர்கள் உற்பத்தியை ஆலய சூழலில் மேற்கொள்ள முடியாது. விற்பனையை மட்டும் செய்யமுடியும், அன்னதான மடங்களில் கடமையாற்றுபவர்கள் மருத்துவச்சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும், கடை உரிமையாளர்களும் ஒவ்வொரு நாளும் வரும் கழிவுகளை வெளியில் வீசாது ஒன்றாகச்சேர்த்து பிரதேசசபை வாகனத்தின் மூலம் அகற்றுதல் வேண்டும், பச்சை குத்துதல், காதுகுத்துதல் செயற்பாடுகள் ஆலய சூழலில் அனுமதிக்கப்படமாட்டாது, புகைத்தல், மதுபாவனைப் பொருள்கள், போதைப் பொருள்கள் என்பவற்றின் பாவனை, விற்பனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது போன்ற விடயங்கள் தெரிவிக்கப்பட்டன. (ஒ-14-26)

# கால்வாய் கழிவுகள் அகற்றப்படவில்லை!

### பொதுமக்கள் கவலை

யாழ்ப்பாணம், செப். 9

கல்வியங்காடு சந்தியில் இருந்து கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை வரையான பருத்தித்துறை பிரதான வீதியின இரு பக்கங்களிலுமுள்ள கால்வாய்களில் நீண்டகாலமாகக் கழிவுகள் அகற்றப்படாமல் தேங்கிக் காணப்படுகின்றன.

இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதோடு நோய்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளது என்று அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான கால்வாய்களே இவ்வாறு துப்புரவின்றி குப்பை கூழங்களோடு நீண்ட நாள்களாக தேங்கிக் காணப்படுகின்றது. இதன் காரணமாக குறித்த வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருன்றனர். எனவே கால்வாய்களில் தேங்கிக் காணப்படும் கழிவுகளை அகற்றுவது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14)

# மருத்துவமாணிப் பட்டப்படிப்புக்கு தாதியர்களை உள்வாங்குங்கள்

### மருத்துவர் சி.யமுனாநந்தா கோரிக்கை

கொழும்பு, செப். 9

இங்கிலாந்தில் நடைமுறையில் உள்ளது போன்று தாதிய சேவையில் 10 வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ள 40 வயதுக்கு மேற்பட்ட குறிப்பாக அவசர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு, சிறுவர் சிகிச்சைப் பிரிவு என்பவற்றில் அனுபவம் உள்ளவர்களை விசேட தகுதிகாண் பரீட்சை மூலம் மருத்துவமாணிப் பட்டப்படிப்புக்கு உள்வாங்கும் செயற்றிட்டத்தை உருவாக்குதல் அவசியம் -இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

கொரோனாப் பெருந்தொற்றும் உலக பொருளாதார நெருக்கடியும் மருத்துவ சேவையும் பாதித்துள்ளது. இதனால் மருத்துவர்களை பல்கலைக்கழகங்கள் உருவாக்கும் அளவு குறைவாக உள்ளது அத்தோடு. பெருமளவான மருத்துவர்கள் அதிக வருமானம் ஈட்டுவதற்காக புலம்பெயர் நாடுகளுக்குச் செல்லும் வீதமும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் ஓய்வு பெறும் மருத்துவர்களின் வயதெல்லையை நீடிப்பதால் நீண்ட தீர்வு கிடைக்காது. மாறாக தாதியப்பட்டதாரிகளை மருத்துவமாணிப் பட்டப்படிப்புக்கு உள்வாங்கும் செயற்றிட்டத்தை உருவாக்குதல் அவசியம். இதனால் எதிர்வரும் காலங்களில் ஏற்படக்கூடிய மருத்துவ ஆளணிப் பிரச்சினையை இலகுவாகக் கையாளலாம். இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல நாடுகளில் மருத்துவர்கள் பற்றாக்குறை ஏற்படவுள்ளது. எனவே இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சாதகமான முடிவை எடுத்தல் அவசியம் - என்றுள்ளது. (ம-14)

# கெற்பேலிப் பகுதியில் கைக்குண்டுகள் மீட்பு!

சாவகச்சேரி, செப். 9

கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில் 6 கைக்குண்டுகள் அண்மையில் மீட்கப்பட்டன என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கெற்பேலிப் பகுதியிலுள்ள தனியார் காணியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட காணி உரிமையாளர், அங்கு சந்தேகத்துக்கிடமான முறையில் சில பொருள்கள் காணப்பட்டதை அவதானித்துள்ளார். இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு காணி உரிமையாளரால் தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த கொடிகாமம் பொலிஸார், சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்பட்ட பொருள்கள், 6 கைக்குண்டுகள் என இனங்கண்டனர். அதன்பின்னர் ஆறு கைக்குண்டுகளையும் செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டனர். (ஒ-14-125)

# வெள்ளவாய்க்கால் மீது பாலம்: அகற்றுமாறு மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 9

பலாலி வீதி இரண்டாம் ஒழுங்கையிலுள்ள வெள்ளவாய்க்கால் மீது தனிநபர் ஒருவரால் அமைக்கப்பட்ட பாலத்தை அகற்றுமாறு கோரி அப்பகுதி மக்கள் கடந்த செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளனர். பலாலி வீதி இரண்டாம் ஒழுங்கையில் நீண்ட வெள்ள வாய்க்கால் ஒன்று காணப்படுகிறது.

குறித்த வெள்ளவாய்க்காலினூடாக அப்பகுதி மக்களின் வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரைக் கூட வெளியேற்ற யாழ் மாநகரசபை அனுமதிக்கவில்லை.

இந்தநிலையில் தனியார் ஒருவரால் வெள்ள வாய்க்கால் மீது சட்டவிரோதமாக பாலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. குறித்த பாலத்தை யாழ்ப்பாண மாநகரசபை உடன் அகற்ற வேண்டும் எனக் கோரி அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ச-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமை மாறாத தனித்துவத்துடன் நல்லூர் மந்திரிமனை புனரமைப்பு



யாழ்ப்பாணம், செப். 9

யாழ்ப்பாண மரபுரிமை மைய வரலாற்றுத் தொன்மைமிக்க நல்லூர் மந்திரிமனையை புனரமைக்கும் செயற்றிட்ட ஆரம்ப கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மந்திரிமனையின் பழமை மாறாமல் அதன் தனித்துவத்தைப் பேணிக் கொண்டு பகுதிபகுதியாக புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

அதன்பிரகாரம் முதலில் மந்திரிமனைக்கு மேல் ஆறு அடி உயரத்தில் தற்காலிகக் கொட்டகை ஒன்றை அமைத்து மந்திரிமனையைப் பாதுகாத்துக் கொண்டு மந்திரிமனையின் உள்ளகப் பணிகள் பகுதி பகுதியாக ஆரம்பிக்கப்படும்.

அதன் பின்னர் மந்திரிமனையின் கூரை மற்றும் மந்திரிமனையின் முகப்பு ஆகியன அவற்றுக்கே உரிய தனித்துவம் மாறாமல் சீரமைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் மழைகாலத்தில் இடிந்து விழக்கூடிய அபாயநிலையில் மந்திரிமனை காணப்படுகிறது என யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் மற்றும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உறுப்பினரும் மாநகர முதல்வருமான வி.மணிவண்ணன் ஆகியோர் தெளிவுபடுத்தியதை அடுத்து கிடைக்கப்பெற்ற நிதிகளில் இருந்து இந்தச் செயற்றிட்டம் தற்போது ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதேவேளை மந்திரிமனை தொடர்பான பழைய ஒளிப்படங்கள் ஆவணங்கள் மற்றும் காணொலி இருப்பின் jaffnaheritagecentre@gmail.com எனும் இணைய முகவரிக்கு அனுப்பி வைத்து ஒத்துழைப்பு வழங்குங்கள்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாத முதல் வாரத்திலே புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-20)

# வாழ்வாதாரம் இழந்த நிலையில் இழப்பீடாவது பெற்றுத் தாருங்கள்

## முல்லைத்தீவு மீனவர்கள் வேண்டுகோள்

முல்லைத்தீவு, செப். 9

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக மண்ணெண்ணெய் வழங்கப்படாத நிலையில் கடற்றொழில் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் இதுவரை நிவாரணமும் கிடைக்கவில்லை என முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடமாகாண ஆளுநர் செயலகத்தால் சமூக மட்ட அமைப்புகளுடனான கலந்துரையாடல் மாவட்ட செயலகங்கள் தோறும் நடைபெற்று வருகின்றன.

அதன்படி முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போதே முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம் மற்றும் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு முல்லைத்தீவு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் வடமாகாண ஆளுநரின் பொதுசன தொடர்பு அதிகாரி ரி.கணேசநாதனுக்கு எடுத்துரைத்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கடற்றொழில் அமைச்சர் அவ்வப்போது மண்ணெண்ணெய் பெற்றுத் தருவதாகவும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் எனவும் வாக்குறுதிகளை வழங்கிவைந்தாலும் அவை வெற்று வாக்குறுதிகளாகவே காணப்படுகின்றன.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கைகள், அதனால் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள், இறங்கு துறைகளுக்கு செல்கின்ற பாதைகள் சீரின்மை, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை ஆகிய இன்னல்களை முல்லைத்தீவு மீனவர்கள் எதிர்கொள்கின்றனர்.

இந்நிலையில் 3 மாதங்களுக்கு மேலாகியும் மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை.

இதனால் வாழ்வாதாரம் இழக்கப்பட்டநிலையில் வாழ்வாதார உதவிகள் மற்றும் இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு தெரியப்படுத்தியபோதும் இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை.

ஆகவே மீனவர்களது வாழ்வாதாரப் பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங்கப்படவேண்டும் -என்றனர். (ச-19)

# துணைவியில் திருடிய கல், மண் மானிப்பாய் அட்டகிரியில் மீட்பு!

## சந்தேகநபரும் கைது!

யாழ்ப்பாணம், செப். 9

துணைவியில் திருடப்பட்ட கல், மண் ஆகியன மானிப்பாய் அட்டகிரியில் கைப்பற்றப்பட்டன என்று வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆனைக்கோட்டை - சங்கரத்தை வீதி புனரமைப்புக்காக துணைவிப் பகுதியில் கொட்டப்பட்ட கிறேசர் கல், கிரவல் மண் ஆகியன கடந்த திங்கட்கிழமை திருடப்பட்டன என்று வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் அன்றையதினம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்த வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மானிப்பாய் அட்டகிரிப் பகுதியில் கல்லும் மண்ணும் அன்றையதினமே கைப்பற்றப்பட்டன.

அதனையடுத்து கல், மண் திருடிய குற்றச்சாட்டில் 57 வயதான யாட் உரிமையாளர் ஒருவரைக் கைது செய்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஞ-14-125)

வேலையாள்கள் தேவை

No.36, K.K. தொழிற்சாலை, படித்த மகளிர்திட்டம் மிருசுவில் எனும் முகவரியில் இயங்கும் ஊதுபத்தி தொழிற்சாலைக்கு பெண் வேலையாள்கள் தேவை. பளை, தென்மராட்சிப் பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத் தக்கது.

077 602 3002

பாதுகாப்பு காவலர் தேவை

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலையொன்றிற்கு பாதுகாப்பு காவலர்கள் (ஆண்) தேவையாக உள்ளது.

குறிப்பு - அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது

வயதெல்லை - 30 - 55

077 130 0190

பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல புடைவை விற்பனை நிலையத்திற்கு புடைவை விற்பனையில் அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புவர்களும் உடன் தேவை.

வயது : 18 - 40 வரை.

தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

பாடசாலை படிப்பை முடித்தவர்களும் தொடர்புகொள்ளலாம்.

077 908 2619



வேலணை - பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில்

பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

முத்துமாரி அம்மன் துணையுடன் நிகழும் மங்கள மிகு சுபகிருது வருடம் ஆவணி மாதம் 27 ஆம் நாள் (12.09.2022) திங்கட்கிழமை துதியை திதியும், சித்த யோகமும் உத்தரட்டாதி நட்சத்திரமும் கூடிய காலை 9.00 மணி 15 நிமிடம் முதல் 10.00 மணி 30 நிமிடம் வரையுள்ள துலாலக்கின சுப முகூர்த்த வேளையில் பாலஸ்தாபனாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. அந்நேரமும் முன்பு நடைபெறும் பூர்வாங்க கிரியைகளிலும் வந்து தரிசித்துய்யுமாறு வேண்டுகின்றோம்.

கிரியாகால விபரம்

11.09.2022 ஞாயிற்றுக்கிழமை

காலை 8.00 மணி முதல்

விநாயகவழிபாடு, அனுஞ்ஞை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்து சாந்தி முதலியன.

மாலை 6.00 மணி முதல்

விநாயகவழிபாடு, அங்குரார்ப்பணம், ரஷாபந்தனம், கடஸ்த்பாபனம், கலாகர்ஷணம், யாகபூஜை, ஹோமம், பேரசலனம், பாலாலய சுத்தி, தீபஸ்த்பாபனம், விம்பஸ்த்பாபனம், பந்தரா சமர்ப்பணம், தீபாராதனை முதலியான.

12.09.2022 திங்கட்கிழமை

காலை 7.00 மணி முதல்

விநாயக வழிபாடு, யாகபூஜை, ஹோமங்கள், பூர்ணாகுதி, தீபாராதனை, தானங்கள், பரிகள், பாலஸ்தாபனாபிஷேகம், மங்கள தர்சனம், தீபாராதனை, விஷேட பூசை, பிரதிஷ்டா சங்கல்ப்பம் நாள் வேலை ஆரம்பம் ஆசியுரை, ஆசீர்வாதம், பிரசாத விநியோகம்.

பாலஸ்த்தாபன பிரதிஷ்டா பிரதம குரு

முத்தமிழ்க் குருமணி

சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்

ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம் சுன்னாகம்.

குறிப்பு: 12.09.2022 திங்கட்கிழமை மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) இடம்பெறும்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

வேலணை - பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில்.

ஆலய திருப்பணிச் சபை, பரிபாலன சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தள்ளாடுகிறது...

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் 37 இராஜாங்க அமைச்சர்களும் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இவற்றில் அதிகமான இராஜாங்க அமைச்சுக்கள் சிறிலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே வழங்கப்பட்டுள்ளன. ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த ஷசீந்திர ராஜபக்சவுக்கும் இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சுக்களுக்குத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படாது என்று கூறப்பட்டுள்ள நிலையில், பெரும் எண்ணிக்கையான இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. பெயரளவிலான இந்த அமைச்சுப் பதவிகள் தனக்கு ஆதரவு தரும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவைத் திருப்திப்படுத்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்டுள்ளன என்று எதிரணிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

நாடு பெரும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், இந்த இராஜாங்க அமைச்சு நியமனங்களால் அரச செலவினம் மேலும் அதிகரிக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

(தொடர்புடைய செய்திகள் 2ஆம் பக்கத்தில்) (அ-எ-இ)

## சிறிலங்கா...

வுக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது. இவர் நாளை சனிக்கிழமை சிறிலங்காவை வந்தடையவுள்ளார் என்று அமெரிக்கத் தூதரகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா வரும் சமந்தா பவர், சிறிலங்கா தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி உட்படப் பல்வேறு விடயங்கள் தொடர்பில், பல தரப்புகளுடன் சந்திப்புக்களை நடத்தவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-22)

## வீங்கிய...

துள்ளது.

பெரும் அமைச்சரவையை நியமிப்பதற்கு எதிராக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரித்து, நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ள சந்தர்ப்பத்தில் பெரும் எண்ணிக்கையான அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களை நியமிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. இவ்வாறு பெரும் அமைச்சரவையை நியமிப்பதன் ஊடாக அரசாங்கம் பழைய, வழமையான பாதையிலேயே செல்கின்றது என்பதை மறைமுகமாக உணர்த்துகின்றது. இதை ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## 37இராஜாங்க...

ஒழுக்க விரோதச் செயல் இல்லையா? என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே ஹர்ஷ டி சில்வா இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது வரிப் பணத்தை ஏழை மக்களுக்கு வழங்க வேண்டும். வரிப் பணத்தின் ஊடாக சமூகப் பாதுகாப்பை வழங்க வேண்டும் என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார கூறுகின்றார். மறுபக்கத்தில் 37 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டு மக்கள் உண்பதற்கு உணவு இல்லாத நிலைமையே காணப்படுகின்றது. நாடு பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. உணவுப் பணவீக்கம் 94 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்த நிலைமை எதிர்வரும் நாள்களில் தீவிரமடையும் என்று உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது. இந்த நிலைமையில், இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பது நியாயமானதா?- என்றார். (அ-எ-22)

## மகாராணி....

பிரிட்டிஷ் அரச பரம்பரையில் மிக அதிக காலம் அரச பதவியில் நீடித்தவர் என்ற பெருமைக்குரியவர் மகாராணி எலிசபெத். இவரது உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த நிலையில்அடிக்கடி மருத்துவக் கண்காணிப்பின் கீழ் இருந்தார். மகாராணி எலிசபெத்தின் உடல் நிலை தொடர்பாக மருத்துவர்கள் கவலை வெளியிட்டிருக்கின்றனர். அவர் தீவிர மருத்துவக் கண்காணிப்பின் கீழ் பராமரிக்கப்படுகிறார் என்று பக்கிங்ஹாம் அரண்மனை ஓர் அறிக்கையில் தெரிவித்திருந்தது.

நேற்று இரவு 11 மணிக்குப் பின்னர், மகாராணி இரண்டாம் எலிசபெத் காலமான தகவல் பங்கிங்ஹாம் அரண்மனையால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அவரது மறைவுக்கு நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். மகாராணியின் புதல்வர் இளவரசர் சார்ள்ஸ் அவரது துணைவியார் கமீலா, இளவரசர் வில்லியம் மற்றும் பேரப் பிள்ளைகள் அடங்கலாக அரச குடும்பத்தினர் அனைவரும் ஸ்கொட்லாந்தில் மகாராணி தங்கியுள்ள பால்மோரல் தோட்ட பங்களாவில் கூடியுள்ளனர். அரசகுடும்பத்துடன் முரண்பட்டுக் கொண்டு வெளியேறிய இளவரசர் ஹரிமற்றும் அவரதுதுணைவி மேகன் இருவரும் கூட ஸ்கொட்லாந்துக்கு விரைகின்றனர் என்று தகவல்கள் தெரிவித்தன.

பிரிட்டிஷ் அரச பரம்பரையில் மிக அதிக காலம் (70 ஆண்டுகள்) அரச பதவியில் நீடித்தவர் என்ற பெருமைக்குரியவர் மகாராணி எலிசபெத். இவர் தனது காலத்தில்பிரிட்டனின்15 பிரதமர்களைக் கண்டவர். கடந்த ஜூன் மாதம் அவர் தனது 70 ஆவது பதவி ஆண்டைக் குறிக்கும் பிளாட்டினம் விழாவில் தோன்றியிருந்தார். (அ-எ-இ)

## யாழில்...

மாவட்டச் செயலகத்தில் நேற்று கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் உதவி மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கத்தினர், யாழ்ப்பாணம் மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்தினர், தனியார் வெதுப்பக உரிமையாளர்கள், பிறீமா நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர், பிறீமா நிறுவன மாவட்ட விநியோகத்தர், செரன்டிப் நிறுவன விநியோகப் பிரதிநிதி, மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் ஆகியோர் கலந்து கொண்டார்.

வெதுப்பக உற்பத்திகளுக்குக் கிடைக்கும் மாவின் அளவு குறைந்துள்ளது என்றும், டீசல் பெறுவதில் நெருக்கடி நிலவுகின்றது என்றும் வெதுப்பக உரிமையாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் விளக்கமளித்த பிறீமா நிறுவன மாவட்ட விநியோகத்தர், கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது தற்போது 45 வீத கோதுமை மாவே இறக்குமதி செய்யப்படுகின்றது. அவற்றில் 55 வீதம் வெதுப்பகங்களுக்கு பங்கீட்டின் அடிப்படையில் வழங்கப்படுகின்றது என்று தெ ரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெதுப்பக சங்கங்கள் இரண்டுக்கும், தனியார் விநியோகத்தர்களும் கோதுமை பகிரப்படுகின்றபோதும், சந்தையில் மாறுபட்ட விலை காணப்படுவது தொடர்பில் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வெதுப்பக சங்கங்களுக்கு 13 ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத வகையில் ஒரு மூடை கோதுமை மா வழங்குவதற்கு பிறீமா நிறுவனம் தரப்பில் இணக்கம் தெரிக்கவிப்பட்டது. வெதுப்பகத் தேவைக்காக வழங்கப்படும் "மில்" ரக கோதுமை மாவை தனியார் கடைகளுக்கு விநியோகம் செய்யும் வெதுப்பகங்களின் தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்புச் சபை நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. கோதுமை மா வழங்கப்படும் வெதுப்பகங்களின் விவரம், அளவு என்பன பிறீமா நிறுவனத்தாலும், வெதுப்பக சங்கங்களாலும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு வழங்கப்படவுள்ளது.

இந்தத் தீர்மானங்களுக்கு அமைய ஒரு இறாத்தல் பாணின் விலையை 200 ரூபாவுக்கு விற்பனை செய்ய வெதுப்பக உற்பத்தியாளர்களும், உரிமையாளர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்த நடைமுறைகளைச் சீராக முன்னெடுப்பதற்கான தற்காலிகப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்காக யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக செயலாளர் ம.பிரதீபன் தலைமையில் ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் வெதுப்பக உற்பத்தியாளர்கள், உரிமையாளர்கள் சங்கங்களின் பிரதிநிதிகள், பிறீமா மற்றும் செரண்டிப் நிறுவனப் பிரதிநிதிகள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (அ-எ-இ)

## நிலக்கரி...

நேரிடலாம் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

தற்போது கையிருப்பில் உள்ள நிலக்கரி ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதிவரை மின்சார உற்பத்தி செய்யவே போதுமானது: உரிய காலத்துக்கு முன்னர் நிலக்கரி பெற்றுக்கொள்ளப்படாவிட்டால் தினமும் 8 மணி நேர மின்வெட்டை நடைமுறைப்படுத்த நேரிடலாம்.

நிலக்கரிக்காக 6 மாதங்கள் காத்திருக்க முடியாது. நிலக்கரி கிடைக்கவில்லை எனில் மின் விநியோகத்தை 24 மணித்தியாலங்கள் வழங்க முடியாது. யாராவது உதவினால் மட்டுமே நிலக்கரி பெற முடியும். போலிப் பரப்புரைகளை முன்னெடுப்பதை விட்டுவிட்டு தேவையான பணத்தை கண்டுபிடிக்கும் வழியைத் தேடுவதே முக்கியமாகும் -என்றார்.

அதேவேளை, மின் உற்பத்திக்குத் தேவையான போதியளவு நீர்மட்டம் காணப்படுகின்றது என்றும், நிலக்கரி இருக்குமாயின் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையில் மின் துண்டிப்பை முன்னெடுக்கவேண்டிய தேவையில்லை எனவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போது மின்சாரத்துக்கான கேள்வி குறைவடைந்துள்ளது. கடந்த வாரத்தில் ஒரு மணித்தியால மின் துண்டிப்பு முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டபோதும், மின் துண்டிக்கப்படவில்லை. கடந்த மூன்றாம் திகதி முதல் மின் துண்டிப்பு முன்னெடுக்கப்படவில்லை. மின்சாரத்துக்கான கேள்வி குறைவடைந்துள்ளமையே அதற்குக் காரணம் - என்றார். (அ-எ-இ)

## நாடாளுமன்றத்தில்...

எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தச் சட்டவரைவு நேற்றுமுன்தினம் விவாதம் இன்றி நிறைவேற்றப்படவிருந்தது. சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டவரைவில் கொண்டு வரப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ஹர்ஷ டி சில்வா ஆகியோர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு அமைய நேற்று விவாதத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை-நேற்று நடைபெறவிருந்த 2022ஆம் ஆண்டுக்கான மத்திய ஆண்டு அரச நிதிநிலை அறிக்கை தொடர்பான பேரவை ஒத்திவைப்பு மீதான விவாதம் பிறிதொரு நாளில் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## கொரோனா...

ழந்தவர்களில் 30 முதல் 59 வயதுக்குட்பட்ட பெண் ஒருவரும், 60 வயதுக்கு மேற்பட்ட 3 ஆண்களும், ஒரு பெண்ணும் அடங்குகின்றனர். இந்த உயிரிழப்புக்களுடன் நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 814 ஆக உயர்ந்துள்ளது. (அ-எ-இ)

## மரக்கிளை...

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், மாதகலில் நேற்று மாலை நடந்துள்ளது.

பாக்கியதாசன் ஜோசப் இமானுவேல் (வயது-75) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மரத்தில் ஏறி அதன் கிளைகளைத் தறித்தபோது குறித்த நபர் தவறிக் கீழே வீழ்ந்துள்ளார். அவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்காக நோயாளர் காவு வண்டி வரவழைக்கப்பட்டபோதும், அதற்கு முன்னதாகவே அவர் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இளவாலைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-27.125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

அரைக்கும் ஆலை வேலையாட்கள், கலியாட்கள் தேவை.

077 772 2215

## சுத்திகரிப்பு பணியாளர் தேவை



யாழ்நகரில் இயங்கும் பிரபல
தனியார் கல்வி நிறுவனத்திற்கு
**சுத்திகரிப்பு பணியாளர்** தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம்
வழங்கப்படும்
மேலதிக தொடர்புகளுக்கு:
**077 656 8168**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 114 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
  விவசாயம் செய்வதற்கும், வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை 1½ லட்சம் (150,000) மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: **077 6585 999**
**076 4365 814**
**077 8748 135**

## இரவுநேர மேற்பார்வையாளர் தேவை

யாழ். நகரில் உள்ள தனியார் நிறுவனமொன்றுக்கு
அச்சுத் துறைசார் அனுபவம் உள்ள
**இரவு நேர மேற்பார்வையாளர் தேவை.**

- **வயதெல்லை 40 - 60**
- **தங்குமிட வசதி கொடுக்கப்படும்.**

விளம்பர இல.001
**மே/பா. உதயன் பணிமனை**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 18 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- நான்கு பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபர்ப்பு) விலை 1½ லட்சம் 150,000/= மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: **076 755 8606**
**077 911 6983**

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 10.08.2022 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர் தில்லைநாயகம் பகீரதன்

**(ரமணி அரைக்கும் ஆலை உரிமையாளர், சின்னக்கடை, குருநகர்)**

அவர்களின் 31ம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வானது இன்று (09.09.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் **"திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில்"** (சட்டநாதர் சிவன் கோவில் அருகில்) நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உடன்வந்து உதவியோருக்கும், தொலைபேசி மற்றும் நவீன தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகளூடாகவும் எங்கள் துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இல.325, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்**

**குடும்பத்தினர்**

# புதிய கடைத் திறப்பு விழா

GRAND OPENING

## செப்டெம்பர் 10 முதல்

## வண்ணமயமான ஆடைத் தெரிவுகளுக்கு

## இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

# சிவமஹால் சில்க்ஸ்

**"வணங்குகின்றோம் பண்போடு"**
**வாழ்த்துங்கள் அன்போடு** **(காலை 10.00 மணி)**

**45 வருட நம்பிக்கையும் பாரம்பாரியமும்**

**அனைவரும் வருக**
**நல்லாசியுடன்**
**நல்வரவு தருக.**

**இல.51, பெரியகடை வீதி,**
**யாழ்ப்பாணம்**
**(Left to Malayan Cafe)**

(CS 200675) (5/6)

**அழைக்கவும் : 077 755 5983,**
**077 892 1439, 074 122 5790**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.